# சாட்சிய வாக்கு மூலம்

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 11.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 62/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-2 |
| **சாட்சியின் பெயர்** | : | சஞ்சய் |
| **தந்தை பெயர்** | : | சம்பத் |
| **கிராமம்** | : | விடையல் கருப்பூர் |
| **தாலுக்கா** | : | வலங்கைமான் |
| **தொழில்** | : | கொத்தனார் |
| **வயது** | : | 18 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். ஆஜர் எதிரிகள் படையாச்சி வகுப்பை சேர்ந்தவர்கள்

ஆவார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா-1 யை தெரியும். அவர் எனது அண்ணன் ஆவார். கடந்த 01.01.2024 ம் தேதி குடவாசலில் இருந்த எங்கள் ஊரான விடையல் கருப்பூர் கிராமத்திற்கு இருசக்கர வாகனத்தில் சந்தோஷ் என்பவர் வாகனத்தை ஓட்டினார். நானும் அபியும் பின்னால் உட்கார்ந்திருந்தோம். விடையல் கருப்பூரில் உள்ள முருகன் கோவில் பஸ் ஸ்டாண்டில் ஆய், ஓய் என்று எதிரி ஹரிஹரண், 2-ம் எதிரி முகேஷ், 3 ம் எதிரி சிவராம், 4 ம் எதிரி சூரியபிரகாஷ், 5-ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள். அப்போது எனது அண்ணன் அ.சா-1 அபிகண்ணணன் நாங்கள் போக வேண்டும் என்று சொன்னார். அப்போது 1ம் எதிரி ஹரிஹரன், 2 ம் எதிரி முகேஷ், 5 ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் பற பயலுங்களுக்கு இங்க என்ன வேலை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டினார்கள். எனது அண்ணன் அ.சா-1 அபிகண்ணன் கேட்க அவர்களிடம் ஏன் இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்டார். கட்டையால் ஹரிஹரன், திவாகர், முகேஷ், சூரியபிரகாஷ், சிவபாலன் ஆகியோர்கள் கட்டையால் எனது அண்ணன் அபிகண்ணனை அடித்தார்கள். அவர்கள் அடித்ததில் எனது அண்ணனுக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. அதை நான் தடுக்க சென்றேன். அப்போது என்னை முகேஷ், திவாகர் ஆகியோர் எனது தலையில் கட்டையால் அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ-1 வரிசையான கட்டைகளால் தான் எதிரிகள் என்னையும், எனது அண்ணனையும் தாக்கினார்கள். பின்னர் சந்தோஷ் வந்து தடுத்தார். அப்போது சத்தம் கேட்டு நிறைய பேர் வந்துவிட்டார்கள். அப்போது எதிரிகள் எங்களை பார்த்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கட்டையை காட்டி மிரட்டினார்கள். பின்னர் சந்தோஷ் எனது அண்ணனை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். நான் மயக்கம் அடைந்துவிட்டேன் என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று தெரியாது. வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக நான்

சேர்க்கப்பட்டிருந்தேன். அதன் பின்னர் மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் காவல் நிலையைத்தில் இருந்து வந்து என்னை விசாரித்தார்கள். அதன் பின்னர் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் வந்து என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.11 18:28:28 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.